உ

சைவ பரிபாலன சபை வெளியீடு

பிரதி விலை ரூபா: 50.00

ஆரம்பம்: விரோதி ௵ ஆவணி ௴ 26 ஆம் உ (1889)

email: editor @ hinduorgan. com

Web: w.w.w hinduorgan. com

# இந்து சாதனம்

(HINDU ORGAN)

புத்தகம்: 120

சர்வதாரி வருடம் பங்குனித் திங்கள் 1 ஆம் நாள் (14.03.2009)

இதழ்: 03

# திருவாவடுதுறை ஆதீனமும் இலங்கையும்

– சிவா. சரணன் –

ஆட்சி பிரிக்கின்றது ; ஆழ்கடலும் பிரிக்கின்றது. எனினும் ஆன்மீகம், கலை, கலாசாரம், மொழி போன்றவற்றால் தமிழ்நாட்டுத் தமிழர்கட்கும் இலங்கைத் தமிழர்கட்குமிடையே நெருக்கமான ஒரு பிணைப்பு நீண்டகாலமாகவே நிலவி வருகின்றது.

இங்கிருந்து அங்கும் அங்கிருந்து இங்குமான இருவழிப் பாதையில் ஆன்மீக-திருத்தல யாத்திரைகள், கலை, இலக்கிய, கலாசாரப் பரிமாற்றங்கள் பயணங்கள் தொன்றுதொட்டே நிகழ்ந்து வருகின்றன.

இரு நாடுகளுக்குமிடையேயான இந்த உறவுப் பாதையை - உணர்வுப் பாலத்தை மேன்மேலும் உறுதிப்படுத்துகின்ற புனிதப் பணியிலே தமிழ் நாட்டிலுள்ள திருவாவடுதுறை ஆதீனம் மிகவும் முனைப்புடன் செயற்பட்டு வருவது பெருமைக்குரியது. பெருமகிழ்ச்சிக்குமுரியது.

இந்தத் தொடர்புகளின் சிறப்பையும் விளைவுகளின் செழிப்பையும் தொகுப்பதற்கு முன்னர், இவ்வாதீனம் பற்றிய அடிப்படை உண்மைகள் சிலவற்றைச் சுருக்கமாகத் தருவது பொருத்தமாகத் தெரிகிறது.

இந்த ஆதீனத்தைக் கி.பி. 14 ஆம் நூற்றாண்டில் நிறுவியவர் அருள்திரு நமசிவாய மூர்த்திகள். திருக்கைலாயத்தில் சீகண்ட பரசிவத்திடம் நேரடியாக உபதேசம்



திருவாவடுதுறை ஆதீனத்துக்குச் சொந்தமான இருபது திருக்கோவில்களுள் ஒன்றான திருவிடை மருதூர் அருள்மிகு மகாலிங்க சுவாமி திருக்கோவில் பெருநலமுலையாள் அம்பாள் சமேத மகாலிங்க சுவாமி – ஆதீனத்தின் குருமகா சன்னிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்.

→

# திருவாவடுதுறை ஆதீனமும் இலங்கையும்

பெற்ற நந்தியெம்பெருமானுடன் ஆரம்பிக்கும் குரு - சிஷ்ய பரம்பரையில் - திருநந்திதேவர், சனற்குமாரர், சத்தியஞான தரிசினிகள், பரஞ்சோதிமா முனிவர், மெய்கண்டதேவநாயனார், அருள்நந்தி சிவாசாரியார், மறைஞானசம்பந்த சிவாசாரியார், உமாபதி சிவாசாரியார், அருணமச்சிவாயர் - வந்த சித்தர் சிவப்பிரகாசரின் அருளாணையின்படி நிறுவப்பெற்றமை காரணமாக இவ்வாதீனம் "திருக்கைலாய பரம்பரைத் திருவாவடு துறை ஆதீனம்" எனப் போற்றப் பெறுகின்றது. நந்தியெம் பெருமான் தொடக்கம் சித்தர் சிவப்பிரகாசர் வரை உள்ளவர்களை "உபதேச பரம்பரை" என்றும் அருள்திரு நமசிவாய மூர்த்திகளுடன் தொடங்கும் குருமகா சன்னிதானங்களை "அபிஷேக பரம்பரை" என்றும் அழைக்கும் சம்பிரதாயம் உண்டு.

கல்வி கேள்விகளிற் சிறந்து, நல்லொழுக்கத்தால் உயர்ந்து, கருணை, ஈகை, நேர்மை, பணிவு, தர்மம், நீதி முதலிய பண்புகளுடன் கனிந்து சிவபக்தியில் திளைப் பவர்களே "குருமகாசன்னிதானம்" ஆகின்றனர்.

இவர்களுட் பலர் சைவசமய நூல்களை ஆக்கியும், பழைய நூல்களுக்கு விளக்கவுரை எழுதியும், தக் காரைக் கொண்டு புதிய நூல்களை ஆக்குவித்தும், ஆதீன வெளியீடுகளாக்கி அளப்பரிய தொண்டு செய் துள்ளனர். சைவசித்தாந்தம் பற்றிய தெளிவு சைவப் பெருமக்களிடம் ஏற்படுவதற்குத் திருவாவடுதுறை ஆதீன வெளியீடுகள் பெரிதும் உதவி வருகின்றன.

சமூக, சமய, அரசியல் வேறுபாடுகளைக் கருத்திற் கொள்ளாமல், நாட்டெல்லைகளைக் கடந்து, சமய, மொழி, கலை, இலக்கியத்துறைகளிற் சிறந்தவர்களை, சாதனை படைத்தவர்களைத் தேடிக் கண்டுபிடித்து பாராட்டிப் பரிசு வழங்கி, விருது வழங்கி, பதவி வழங்கிக் கௌரவிப்பதை நடுவுநிலையில் நின்று நீண்டகால மாகவே நடைமுறைப்படுத்தி வருகின்ற சிறப்பும் இவ்வாதீ னத்துக்கு உண்டு. ☉

யாழ்ப்பாணத்துப் பாமர மக்களிடம் இருந்த பண ஆசையையும், பதவி ஆசையையும் தமக்குச் சாதக மாகப் பயன்படுத்தி, அவர்களுக்குக் கல்வியூட்டும் சாக்கில், தமது மதமாற்றும் நோக்கத்தைக் கச்சிதமாக நிறைவேற்றிக்கொண்டிருந்தனர் மிஷனரிமார். அரச ஆதர வுடன் செயற்பட்டு வந்த அவர்களின் முயற்சிகளை முடக்குவதற்கு முறியடிப்பதற்குக் கல்வி என்ற ஆயுதமே பொருத்தமானதெனக் கண்டார் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகம்பிள்ளை.

மாணவர்களுக்குத் தேவையான தரமான பாடப் புத்தகங்களைத் தானாகவே எழுதவும், அச்சிற் பதிப் பிக்கவும் விரும்பிய அவர் அச்சியந்திரம் வாங்குவதற் காகத் தமிழ்நாட்டுக்குச் சென்றார். திருவாவடுதுறை ஆதீ னத்தின் சிறப்புக்களை ஏற்கெனவே கேள்வியுற்றிருந்த ஆறுமுகம்பிள்ளை அதன் ஆதீனகர்த்தரான 15 ஆவது பட்டம் அருள்திரு அம்பலவாண தேசிக பரமாச்சாரி யாரைக் கண்டு வணங்கி மகிழவும், தன் நூலாக்கப் பணிக்காக ஆதீனத்திலுள்ள ஓலைச்சுவடிகளை ஆய்வு செய்யவும் விரும்பி அங்கே சென்றார். ஆதீனகர்த்தாவுட னும், அங்கிருந்த ஏனைய அறிஞர்களுடனும் ஆறுமுகம் பிள்ளை செய்த சமய, இலக்கியக் கலந்துரையாடல் களிலிருந்தும், ஆற்றிய தர்க்கரீதியான தெளிவான சொற் பொழிவுகளிலிருந்தும், அவருடைய ஆழமான சமய அறிவையும், பேச்சாற்றலையும் கண்டு வியந்த ஆதீன கர்த்தர் அருள்திரு அம்பலவாண தேசிக சுவாமிகள் "நாவலர்" என்ற விருதினை அவருக்கு வழங்கியமை, யார், யாருக்கு, எவ்விதமான விருதினை வழங்கவேண்டும் என்பதற்குச் சிறந்த உதாரணமாகத் திகழ்கின்றது. ❋

(வளரும்)

# சைவ வாழ்க்கை வாழ...

**எப்படியும் வாழலாம் என்றில்லாமல், இப்படித்தான் வாழ வேண்டும் என்பதை, சைவநெறிகளைக் கடைப்பிடித்து வாழ்ந்து காட்டியிருக்கின்றார்கள் நம்முன்னோர்கள். ஆனால் இன்றுள்ளோரிற் பெரும்பாலானவர்கள் சைவ நெறிமுறைகளைக் கடைப்பிடிப்பதிற் கவனம் செலுத்து வதில்லை. இந்த நிலை மாறி மக்கள் சைவ வாழ்க்கையை வாழும் நிலைமையை ஏற்படுத்தச் சைவப் புலவர்கள் முன் வரவேண்டும்.**

*அகில இலங்கைச் சைவப் புலவர் சங்க ஆண்டு விழாவில் நல்லை ஆதீன முதல்வர்*
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள்.**

# சிவனும் சைவமும்

**'சிவேந ஸ்தாபிதம், சைவம்**
**சைவேந ஸ்தாபிதம் சிவம்'**

**என்பது ஆகம வாக்கியமாகும். சிவனால் சைவ சமயம் ஸ்தாபிக்கப்பட்டது; சைவனால் சிவன் ஸ்தாபிக் கப்படுகின்றான் என்பது பொருளாகும்.**

**- சிவாகம ஞானபானு**
**தா. மஹாதேவக்குருக்கள்**

# சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவோம்.

**திருஞானசம்பந்தர் முதன் முதலில் திருப்பிரமபுரத்திற் பாடியருளிய திருப்பதிகத்தின் மூன்றாம் நான்காம் [illegible]ரங்களின் பதவுரை, பொழிப்புரை ஆகியவற்றைத் தருகின்றோம். கருத்தை அறிந்து கொண்டால், கசிந்துருகிப் பாடலாம்.**

## திருஞானசம்பந்தர் திருப்பதிகம்

*தலம்: திருப்பிரமபுரம்* *பண்: நட்டபாடை*

**திருச்சிற்றம்பலம்**

**நீர்பரந்த நிமிர் புன்சடை மேலோர் நிலா வெண்மதி சூடி**
**ஏர்பரந்த இன வெள்வளை சோர என் உள்ளங் கவர்கள்வன்**
**ஊர்பரந்தஉல கின்முதலாகிய ஓருரீது வென்னப்**
**பேர்பரந்தபிர மாபுரமேவிய பெம்மான் இவனன்றே.**

**நீர்பரந்த** - கங்கை நீர் பரந்த, **நிமிர்** - நீண்ட, **புன் சடைமேல்** - புல்லிய சடையின் மேல், **ஓர் நிலா வெண்மதி** - ஒப்பற்ற ஒளியையுடைய வெள்ளிய சந்திரனை, **சூடி** - (திருமுடியில்) தரித்து, **ஏர்பரந்த** - அழகு மிக்க, **இனம்** - கூட்டமாகிய, **வெள்வளை சோர** - வெள்ளிய வளையல் கழன்று விழுமாறு, **என் உள்ளம் கவர்கள்வன்** - என்னைத் தன்வயமாக்கிக் கொண்டவன், **ஊர்பரந்த** - ஊர்கள் நிறைந்து பரவிய, **உலகின்** - இவ்வுலகினிடத்து, **முதல் ஆகிய** - முதன்மை பெற்ற, **ஓர் ஊர் இது என்ன** -ஒப்பற்ற ஊர் என்று எடுத்துக்கூறும்படி, **பேர்பரந்த** - புகழ்மிக்க. **பிரமாபுரம் மேவிய** - சீகாழியின் கண் எழுந்தருளிய, **பெம்மான் இவன்** - பெருமானாகிய இவனே.

**பொழிப்புரை:** கங்கை நீரையுடைய சடையிலே, ஒப்பற்ற ஒளியையுடைய சந்திரனைச் சூடியவனும், அழகான வெள்ளிய வளையல்கள் என் கைகளிலிருந்து கழன்று விழும்படி என்னைத் தன்வயமாக்கிக் கொண்டவனும், உலகில் முதன்மை பெற்ற ஊர் என்று சொல்லும்படி புகழ்மிக்க சீகாழியில் எழுந்தருளியுமுள்ள சிவபெருமானே (எனக்கும் பாலூட்டியருளியவர்)

**விண்மகிழ்ந்த மதில் எய்ததும் அன்றி விளங்கு தலையோட்டின்**
**உண்மகிழ்ந்து பலி தேரியவந்தென துள்ளங்கவர் கள்வன்**
**மண்மகிழ்ந்த அரவம்மலர்க் கொன்றை மலித்தவரை மார்பில்**
**பெண்மகிழ்ந்த பிர மாபுரமேவிய பெம்மான் இவனன்றே.**

**விண்மகிழ்ந்த** - ஆகாயத்திற் சஞ்சரித்து மகிழ்ந்த, **மதில்** - மும்மதில்களையும், **எய்ததும் அன்றி** - அம்பினை எய்து அழித்ததுமல்லாமல், **விளங்கு** - பிரகாசிக்கின்ற, **தலை ஓட்டில்** - நான்முகனது வெண்டலையோட்டின் கண், **உண்மகிழ்ந்து** - மனமகிழ்ந்து, **பலி தேரிய வந்து** - பலி ஏற்பதற்காக எழுந்தருளி, **என் உள்ளம் கவர்கள்வன்** - என்னைத் தன்வயமாக்கிக் கொண்டவன், **மண் மகிழ்ந்த** - பூவுலகத்தை விரும்பிய, **அரவம்** - பாம்பும், **மலர் கொன்றை** - கொன்றை மலர் மாலையும், **மலிந்த** - நிறைந்த, **வரை மார்பில்** - மலைபோன்ற திருமார்பிலே, **பெண் மகிழ்ந்த** - உமாதேவியாரை வைத்து மகிழ்ந்த, **பிரமாபுர மேவிய** - சீகாழிப் பதியில் எழுந்தருளிய, **பெம்மான் இவன்** - பெருமானாகிய இவனே.

**பொழிப்புரை:-** ஆகாயத்திலே திரிகின்ற முப்புரங்களை அழித்தவனும், பிரம்மாவின் தலை ஓட்டிலே பலி ஏற்கவந்தவனும், என்னைத் தன்வயப்படுத்தியவனும், பாம்பும், கொன்றை மாலையும் நிறைந்த தன் மார்பிலே உமாதேவியாரை வைத்து மகிழ்ந்தவனும் சீகாழியிலே எழுந்தருளியிருக்கின்றவனுமாகிய சிவபெருமானே (எனக்குப் பாலூட்டியவன்) ❋

# இங்கே(யும்)... இப்படி

**மார்கழி - திருவெம்பாவைக் காலத்தில் காலையில் மட்டுமல்லாமல் மாலையிலும் திருவெம்பாவை ஓதப்படுவது காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் மட்டுமே என இந்துசாதனம் - தைமாத இதழில் (14.01.2009) குறிப்பிட்டிருந்தோம். நல்லூர் கமலாம்பிகா சமேத கைலாயநாதர் கோவிலிலும் பல்லாண்டு காலமாக இவ்வழக்கம் நடைமுறையில் இருக்கின்றதென அறிவிக்கின்றார், அக்கோவிலின் நிர்வாகப் பொறுப்பில் இருப்பவரும் பல்கலைக்கழக விரிவுரை யாளருமான ஸ்ரீ. கிருஷ்ணானந்த சர்மா.** ❋

**- ஆசிரியர் -**

# அநுபவம் – அற்புதம் – ஆனந்தம் –2

பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன் அவர்களின் வாழ்க்கையில் யாழ்ப்பாணம் யோகர்சுவாமிகள் நிகழ்த்திய அற்புதத்தைத் தைத் திங்கள் இதழில் வெளியிட்டோம். புதுதில்லி மத்திய திட்டக்குழு உறுப்பினர் டாக்டர் கி. வேங்கடசுப்பிரமணியன் அவர்களின் பிறப்புக்கும் வாழ்க்கைச் சிறப்புக்கும் வழி சமைத்துக் காஞ்சிப் பெரியவர் நிகழ்த்திய அற்புதம் சம்பந்த மான விபரங்களை இங்கே தருகின்றோம்.

தென்னிந்தியா திருநெல்வேலி மாவட்டத்திற் பிர பல மிராசுதாராக இருந்த எஸ். நாராயண அய்யரின் ஒரே செல்வ மகள் மீனாட்சிக்கு ஒன்பதாவது தடவை யாகத் தாய்மைப்பேறு கிட்டியிருந்தது. ஏற்கெனவே பிறந்த எட்டுக் குழந்தைகளும், பிறந்து சில மாதங் கள், ஆண்டுகள் மட்டும் வாழ்ந்து தம் ஆயுளை முடித்துக்கொண்டு விட்டன. குழந்தைகளின் மரணம் மீனாட்சி அம்மாளை மட்டுமல்லாமல் அவருடைய தந்தை நாராயண அய்யரையும், கணவரையும் வெகு வாகப் பாதித்துவிட்டது. இந்த ஒன்பதாவது பிரசவம் எவ்வித பிரச்சினையுமில்லாமல் நன்றாக நடக்க வேண்டும்; பிறக்கும் குழந்தை நீண்ட ஆயுளுடன் வாழ வேண்டும் என்பதே அவர்களின் இடைவிடாத பிரார்த்தனையாக இருந்தது.

ஆனால் எட்டாவது மாத முடிவில், மீனாட்சி அம்மாளுக்குக் குறளி வலிப்பு வந்துவிட்டது. மூவரும் பட்ட பாட்டை வர்ணிக்க முடியாது. குழந்தை பற்றிய அக் கறையை விட, அலறித் துடிக்கும் மகளின் வேத னையை நீக்க வேண் டும் என்பதே நாராயண அய்யரின் ஒரே நோக்கமாக இருந்தது.

மிகச் சிறந்த வைத்தியநிபுணர் எனப்பெயர் பெற்ற டொக்ரர் ஆர். வி. ராஜம், திருநெல்வேலி நகர மருத் துவ மனையில் அப்போது பணிபுரிந்து கொண்டிருந் தார். மகளை அங்கே கொண்டு செல்ல நாராயண அய்யரால் முடியவில்லை. கார் வசதி இல்லாத காலம் அது. மாட்டுவண்டிலிற் கொண்டு செல்வது மகளின் உயிருக்கு ஆபத்தாக மாறிவிடுமோ என்றும் பயந்தார் அவர்.

வெறும் செல்வந்தராக மட்டும் வாழாமல் தான தருமங்கள் பலவற்றைச் செய்து எல்லோருடைய மதிப்புக்கும் கணிப்புக்கும் ஆளாகியிருந்தவர் நாரா யண அய்யர். திருச்செந்தூர் முருகன் கோவிலுக்கு இரண்டு கிராமங்களையே நன்கொடையாகக் கொடுத்தவர்.

திடீரென்று மகளுக்கு ஏற்பட்ட வலிப்பைப் பற்றி டொக்ரர் ராஜத்திடம் அவர் சொன்னபோது, அவரு டைய மனவருத்தத்தையும் இக்கட்டான நிலையை யும் நன்குணர்ந்து கொண்டு, அவருடைய வீட்டிற்கே சென்றார் டொக்ரர்.

மீனாட்சி அம்மாளைப் பரிசோதித்துப் பார்த்து விட்டு, "மீனாட்சிக்கு இனிக் குழந்தையே வேண்டாம். சத்திர சிகிச்சை மூலம் குழந்தையை அகற்றி விட வேண்டும்." என உறுதியாகச் சொல்லிவிட்டார்.

இடிந்துபோய் விட்டார்கள் எல்லோரும்.

"மேலும் தாமதிக்காமல், தாயைக் காப்பாற்றிவிட வேண்டும்" என்று சொன்ன டொக்ரர் ராஜம், வீட்டில் சத்திர சிகிச்சையைச் செய்யக்கூடிய ஏற்பாடு களுடன் மீண்டும் வருவதாகச் சொல்லிவிட்டுப் புறப்பட்டுவிட்டார்.

அவர் சொன்னதற்குக் கட்டுப்படுவதை விட வேறு வழி ஏதும் இருப்பதாக நாராயணசாமி அய்யருக்கோ மீனாட்சியின் கணவருக்கோ தெரியவில்லை.

சோகமே உருவாகி, கண்ணீர் வடித்துக் கொண் டிருந்த அவர்களின் காதுகளில், பல்லக்கு வரும் போது ஏற்படும் மணியோசை கேட்டது. வெளியே எட்டிப் பார்த்தார்கள்.

திருச்செந்தூர் முருகனைத் தரிசிப்பதற்காகக் காஞ்சி **காமகோடிபீடம்** ஜகத்குரு சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் பல்லக்கிலே, பக்தர்கள் புடை சூழ வந்துகொண்டிருந்தார்கள்.

நாராயணசாமி அய்யருடைய வீட்டைத் தாண் டித்தான் திருச்செந்தூர்க் கோவிலுக்குச் செல்ல வேண்டும்.

ஏற்கெனவே சங்கர மடத்துடன் நெருங்கிய தொடர்பைப் பேணிவந்த நாராயணசாமி அய்யரும் மருமகனும், தம் வீட்டு வாசலுக்கு நேரே பல்லக்கு வந்தபோது, நடு வீதியிலே நெடுஞ்சாண் கிடையாக விழுந்து வணங்கினார்கள். பல்லக்கு நின்றது.

வாய் திறந்து அவர்கள் இருவரும் எதையும் சொல்வதற்கு முன்னரே காஞ்சிப் பெரியவர் திருவாய் மலர்ந்தார்.

"கவலை வேண் டாம். காமாட்சியின் அருளால் மீனாட்சிக்கு நல்ல ஆண் குழந்தை பிறக்கும். பேரனுக்குத் திருப் பதியும் திருச்செந்தூரும் சேர்ந்த பெயரை - வேங்கட சுப்பிரமணியன் - என்ற பெயரை இடுங்கள்" என்று சொல்லி மந்திராட்சதையைக் கையில் கொடுத் துவிட்டுத் திருச்செந்தூருக்குச் சென்றுவிட்டார்.

மலைத்துப்போய் விட்டார்கள் மாமனும் மரு மகனும்!

டொக்ரர் ராஜம், அறுவைச் சிகிச்சைக்காக மயக்க மருந்து, கருவிகள் முதலியவற்றை எடுத்து வரச் சென்றிருக்கிறார். மீனாட்சியோ ஏற்கனவே மயக்கத்தில் ஆழ்ந்திருக்கிறார்; ஆஸ்பத்திரிக்குக் கூடப் போகமுடியாத நிலை.

ஆனால், அதற்குள் குழந்தைக்குப் பெயர் வைத் தாகி விட்டது, அதுவும் காஞ்சிப் பெரியவர் செய்த நாமகரணம்!

என்ன ஆச்சரியம்!

குழந்தை ஒன்றின் அழுகுரல் வீட்டில் கேட் கிறது. வீட்டிற்குள் ஓடோடிச் சென்று பார்த்த தந்தை யும், தாத்தாவும் பூரித்துப்போய் நிற்கின்றார்கள். டொக்டர் ராஜம் அவர்களின் அறுவைச் சிகிச்சைக் குத் தேவையே இல்லாத நிலையில் எட்டாவது மாதத்திலேயே குழந்தை ஒன்று அவசரப்பட்டுப் பிறந்துவிட்டது!

அந்தக் குழந்தைதான், பின்னர் எம். ஏ. பி. எல். பி. டி பி. எச்.டி முதலிய பட்டங்களைப் பெற்று, படிக் கும்போதே பல தங்கப்பதக்கங்களைப் பெற்று பல மாவட்டங்களிற் கல்வி அதிகாரியாகவும், தமிழகக் கல்வித்துறை இயக்குநராகவும், புதுவை மத்திய பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தராக வும் பணியாற்றிய டாக்டர் கி. வேங்கடசுப்பிரமணியன்!

"நான் பிறந்த கதை" என்ற தலைப்பிலே தாய், தந்தை, தாத்தா சொன்ன விபரங்களைக் கேட்டு இந் தக் கட்டுரையை 2003 ஆம் ஆண்டில் எழுதிய போது புதுதில்லியில் மத்திய திட்டக்குழு உறுப்பினராக - ஓர் அமைச்சருக்குரிய அந்தஸ்துடன் அவர் பணி யாற்றினார்.

சங்கர மடத்துக்குச் சென்று, நடமாடும் தெய்வ மான காஞ்சிப் பெரியவரை வணங்கும் போதெல்லாம் "இவன் காஞ்சிக் குழந்தை" என்று அவர் குறிப்பிடு வதை நினைந்து நினைந்து மகிழ்வார். ❋

# நாவலர் சரிதமோதும் நற்றமிழ்மாலை

- கவிஞர் இராசையா குகதாசன்

யாழ். நாயன்மார்கட்டைச் சேர்ந்த திரு. இராசையா குகதாசன் மரபுசார்ந்த சைவத் தமிழ்க் கவிஞர். இவர் ஆக்கிய திருவூஞ்சற் பாடல்கள் பல ஆலயங்களிற் பக்தியுடன் பாடப்படுகின்றன. செல்வச் சந்நிதி முருகன் பேரில் இவர் பாடிய திருப்புகழ்ப் பாடல்கள் குறிக்கத்தக்கவை.

## விநாயகர் காப்புத்துதி

தில்லையி லாடு கின்ற தெய்வநற் செயலி னாலே,
தொல்லையி லாழ்ந்து நின்ற தீந்தமிழ் சைவம் காக்க
நல்லையிற் தோன்றி வாழ்ந்த நாவலர் சரிதம் சொல்ல
எல்லையி லருளை வாரி ஏரம்பன் காப்ப தாமே.

## சிவன் துதி

சைவமுந் தமிழும் பாரிற் தாழ்வுபெற் றழிந்த காலை
கைவரு வழிக ளோடு கவினுற ஆக்கி வைத்து
ஐவரெம் குரவ ரான அறுமுகன் காதை பாட
மைவரு கண்டன் தாளை மனதினுள் வணக்கஞ் செய்வாம்.

## அம்பிகை துதி

பொய்ம்பொழி மறைகள் காட்டிப் போதகம் பலவும் செய்து
தம்மதம் மாற்றல் கண்டு தடுத்திட மார்க்கம் தேடி
மெய்ம்மறை வழிகள் நாட்டி மேதினி வாழ்வை நீத்த
அம்மகர் புகழை யோத அம்பிகை யருள்க மாதோ!

## ஆறுமுகன் துதி

கோன்முறை நீதி மாறிக் கொடுமத மாற்றம் மாற்றி
நான்மறை யாக மங்கள் நவில்திரு முறைக ளூட்டி
மேன்மைகொள் சைவ நீதி மேதினி யோங்கச் செய்த
பான்மையர் பெருமை கூறப் பன்னிரு கையன் காப்பாம்.

## நூல் (வேறு)

1. செல்வவடி வேல்மொழியச் செந்தமிழ தாலே
நல்லைநகர் நாவலரின் நற்சரித மாலை
சொல்லுமுறை யேதுபிழை சேர்ந்திடினுந் தள்ளி
நல்லதெனக் கொள்கவென நயந்துபணி கின்றேன்.

## வேறு

2. இந்துமா கடலின் முத்தா யிலங்கிடு மிலங்கை நாட்டில்
வந்துமா தவர்கள் வாழும் வடக்கினில் நெற்றி சூடும்
அந்தமா திலகம் போல அமைந்ததென் றகிலம் போற்றும்
கந்தமா கோட்டம் சூழ்ந்த கவின்பதி யாழ்ப்பா ணத்தே.

3. நாற்படை யணிகள் சூழ நடுவிருந் தரசன் போல
நூற்படி யமைந்தி டாதும் நுவலரு மருளை ஈந்தன்
பாற்படு மடிய ராகிப் பதமதை வணங்கு வார்க்கு
ஏற்புடை யருளை வார எழுந்தருள் கந்த சுவாமி.

4. பாற்றிரு வண்ண மேனிப் பகந்தமிழ் வடிவம் நீக்கி
கூற்றெனச் சென்று சூரைக் குலமொடு மாய்க்க
வென்றே
நீற்றணி நிமலன் தேவி நிமலியாம் சக்தி யீந்த
வேற்படை மூலத் தானம் வீற்றிருந் தருளு நல்லூர்.

5. சிவநெறி முறையில் வாழும் திருவது புவியிற் பெற்றோர்
இவரையொத் தவர்க ளிங்கே எவர்களு மில்லை
யென்றே
அவனியி லுள்ள பேர்கள் அகமதுள் வாழ்த்தச் செய்முற்
பவமுறு தவத்தைப் பெற்ற பாங்குடைக் குலம தான.

## வேறு

6. கார் காத்த வேளாளர் கவின்வருணந் தன்னில்
பேர் பாண்டிக் குடிமழவ ராயப்பரம் பரையில்
பார் ஏற்று ஞானப்பிர காசரது மரபில்
தார் போற்று நல்லூரின் தவஞானப் பேறால்.

## வேறு

7. சீராருந் செந்தமிழ்செய் தவப்பயனும் திருவாரும்
தந்தை யான
பேராருங் கந்தப்பிள்ளை புரிந்த தவப் பயனும் தாய ளான
நேராரில் சிவகாமி நிகழ்த்தியநற் றவப்பயனும் நிகரார்
நல்லை
ஊராரும் செய்ததவப் பயனும்வந் தொன்றாகி உலகிற்
சேர.

8. இத்தரை யாயிரத் தெண்ணூற் றிருபத் திரண்டு சேரும்
சித்திர பானு வாண்டு சிறந்தமார் கழியி னைந்து
முத்தனை யோகஞ் சேர்ந்த முகூர்த்தமென் றறிஞர்
போற்றும்
அத்தினம் புதனிற் சைவர் ஆற்றிய தவத்தின் பேறாய்.

9. மனுநெறி யுலகு வாழ மறையொடா கமமும் வாழ
தனமெனு மெழுத்தைந் தோடு தமிழொடு சைவம் வாழ
இனமுறு மயக்கம் போக்கி யிருளினை யகற்றும் ஞான
தினகரன் போல வந்தே திருஅவ தாரஞ் செய்தார்.

10. பாதகஞ் செய்கு வோரால் பசுந்தமிழ் சைவம் கானும்
பேதகம் நீக்கிப் பாரில் பீடுறச் செய்ய வென்றே
மாதவர் ஒருவர் வந்திம் மகிதலத் துதித்தா ரென்றே
கோதில வீடியற் காலை கூவின கோழி யெல்லாம்.

11. பொற்பினை யிழந்திப் பாரிற் போற்றிடப் பயந்து வாழும்
சிற்பரன் புகழை யோதும் செழுமறை கருதி யாவும்
அற்புதன் வரவி னாலே அவனியி லோங்கு மென்றே
உற்பவத் துணர்ந்த வன்போ லுதித்தனன் கிழக்கிற் பானு.

## நாமகரணம்

12. நாவல ராகிப் பின்னாள் நானிலம் போற்றும் சைவக்
காவல ராவ ரென்றே கணித்தறிந் துணர்ந்த தாலே
சேவலங் கொடியன் செவ்வேள் சிறப்புறு நாமந் தன்னில்
ஆவல ராகி ஆறுமுகப்பிள்ளை யென்று வைத்தார். ❋

(வளரும்)

# சமயம் ஒரு வாழ்வியல் – 3

– கலாநிதி. மனோன்மணி சண்முகதாஸ் –

பகற்பொழுது மனிதனின் செயற்பாடுகளுக்கு ஏற்ற பொழுதாகவும், இரவுப்பொழுது மனிதன் ஓய்வுகொள்ளும் பொழுதாகவும் அமைந்திருந்தன. இது இன்றும் தொடர் கின்றது.

ஒரு நாளின் தொடக்கமாக விளங்கும் காலைப் பொழுதை நாம் எதிர்கொள்ளும் முறைமை ஒன்றுண்டு. முதல்நாளின் செயற்பாடுகளை முடித்து மறுநாளின் வரவை எதிர்பார்த்து உறங்கச் செல்லும் போது மறு நாளின் காலைப்பொழுதையும் மனதிலே வரவேற்கிறோம். இந்த எதிர்பார்ப்பை நமது முன்னோர்கள் வாழ்வியலில் ஒரு வழிபாட்டு நெறியாகக் கொண்டிருந்தனர்.

**'காலையும் மாலையும் கடவுளை வணங்கு'** என்ற ஒரு கோட்பாடு நம்மவரிடையே நிலைத்திருந்தது. காலை யையும் மாலையையும் உணர்த்த வேறு உயிரினங் களின் செயற்பாடுகளும் நடைபெற்றன. காலை நேரத்தில் சோலையிலுள்ள மலர்களை வண்டினங்கள் கிண்டும் காட்சியைப் பல தேவாரப் பாடல்களிலே காணலாம். அத்துடன் காலைவேளையில் நீர்நிலையில் பெண்கள் ஆரவாரமாக நீராடும் காட்சியையும் பதிவுசெய்துள்ளன. கோயில்களிலே துந்துபி, சங்கு, குழல், யாழ், முழவு போன்ற இசைக்கருவிகள் இசைக்கப்படுகின்றன. காலையிலெழுந்து நீராடிய பின்னர் வாசனை பொருந் திய தூய மலர்களைக்கொணர்ந்து அடியார்கள் பரவி வழிபடுகின்றனர்.

இத்தகைய ஓர் ஒழுங்கான செயற்பாடு மனித வாழ்வைச் செம்மைபெற வைத்திருந்தது. நாளின் தொடக் கத்தில் ஒரு தூய்மையையும் அழகையும் பேணும் பண் பாடு நம்மவரிடையே தோன்றி நிலைத்திருந்தது. நீரும் மலரும் வாழ்வியலோடு நெருங்கியிருந்தன. இயற்கை யின் கொடையை நாளின் தொடக்கமான காலையிலேயே பயன்படுத்தும் முறைமை ஒரு பயிற்சியாக, வழிபாட்டு நடைமுறையாக அமைந்திருந்தது. மனிதனின் புறத் தூய்மை நீரால் பேணப்பட்டது. மணமுள்ள மலர்கள் அழகுபடுத்தப் பயன்பட்டன. ஆனால் இத்தகைய செயற் பாட்டை ஒரு பொதுநிலையில் பேணுவதற்கு திருக் கோயில் வழிபாடு தோற்றம் பெற்றது. இறைவன் உருவத் திருமேனியைக் காலைக் கதிரின் ஒளிக்கு ஒப்புமை கூறும் கருத்து உருவாகிற்று.

நீரும் மலரும் வழிபாட்டில் இணைந்தபோது வீட்டு நிலையிலும் பொதுநிலையிலும் பேணப்பட்ட ஒரு முறைமை இருந்தது. நீரின் தூய்மையைப் பேணப் பல முயற்சிகள் கைக்கொள்ளப்பட்டன. கிணற்றுநீர், ஆற்று நீர், மழைநீர் என மூன்று வகையான நீர் பயன்பட்டது. வீட்டுநிலையான தூய்மைக்கு இம்மூன்றும் பெரிதும் பயன்படுத்தப்பட்டன. உடல் தூய்மைக்கும், ஆடைத் தூய்மைக்கும், உணவுத் தூய்மைக்கும் நீர் இன்றியமை யாததாக விளங்கியமையால் வழிபாடு செய்யும்போது நீர்வளம் வேண்டி வழிபாடு செய்யும் மரபும் தோன்றி யது. கிணறு, கூவல், ஏரி, குளம், அருவி, ஆறு, கடல், சுனை, குட்டை, மடு, புனல் என பல பெயர்களால் நீர் நிலைகள் வழங்கப்பட்டன. பொதுநிலையில் ஆறு, கடல், அருவி, சுனை என்பன வழிபாட்டிடங்களாகவும் கருதப்பட்டன. இயற்கையின் பேராற்றல் அங்கு உறைவதாக நம்பப்பட்டது. இறைவழிபாட்டில் நீர் முக்கியமானதாகப் போற்றப்பட்டது. இறைவன் திரு முடியாகக் கங்கை ஆறு சிறப்பிக்கப்பட்டது. கங்கை யைச் சடைவைத்தவர், கங்கைசேர் சடைமுடி, கங்கைவார் சடையாய், கங்கை நீர் சடையுள் வைக்க, கங்கை நீர் சடைமேல் என்பன போன்ற தொடர்கள் தேவாரங்களிலே காணப்படுவது இதனை உறுதி செய்கிறது.

மலர்கள் வீட்டில் நறுமணம் பரப்பவும் வழிபாட்டிற் கெனவும் பேணப்பட்டன. வெள்ளை, மஞ்சள், சிவப்பு, நீலம் என்னும் நிறமுள்ள மலர்களை அழகுபடுத்தும் நிலையில் சூடிக்கொள்ளும் வழக்கம் இருந்தது. பெண்கள் காலையில் நீராடிக் கூந்தலில் மலர் சூடித் தம்மை அழகு செய்தனர். இறை உருவங்களை வண்ணமலர்களால் அழகுபடுத்தி வழிபாடு செய்யும் மரபும் தோன்றியது. மலர்ப் பண்பாடு மக்கள் வாழ்வில் ஒன்றிணைந்திருந்தது. மலர்ச்செடிகளை நட்டுப் பாது காத்துப் பயன்படுத்தும் பண்பாடு வழிபாட்டு நடைமுறை யுடன் தொடர்புற்றிருந்தது. மல்லிகை, முல்லை, செவ்வரத்தை, நீலோற்பலம், அல்லி, தாமரை, கொன்றை, பாதிரி, பன்னீர், செவ்வந்தி, விஷ்ணுகாந்தி எனப் பலவகையான மலர்ச்செடிகளை வீட்டுச்சூழலில் நாட்டி பராமரிக்கும் பண்பாடு பேணப்பட்டது. துர்நாற்றத்தைப் போக்கவும், கண்ணுக்குக் கவினைத் தரவும் மலர்களை மக்கள் பெரிதும் விரும்பினர். இறை வழிபாட்டிற்குச் செல்லும்போது மலர்களை எடுத்துச் சென்றனர். மலர்களை அழகாகத் தொடுத்து, தொடை, மாலை, இண்டை, கண்ணி, தார், அலங்கல், சரம், ஆரம், தொங் கல், கோதை எனப் பல்வேறு பெயர்கள் வழங்கப்பட்டதை அறியமுடிகின்றது. மலர்களின் தோற்றத்திற்கும் வண் ணத்திற்கும் ஏற்றவகையில் அவற்றைப் புனையும் கலை ஒன்று உருவாகியது. திருக்கோயில்களில் மாலை கட்டும் பணி சிறப்பாக இடம்பெற்றது.

இன்று மலர்ப் பண்பாடு சிதைந்துவிட்டது. மேலைத் தேயத்தவர் வருகையால் மலர்கள் புறந்தள்ளப்பட்டு வண்ணப்பச்சிலைகளை வளர்க்கும் புதிய நாகரிகம் பேணப்பட்டது. மணமுள்ள மலர்களை விட்டு, நிலத்திலே சீமைப்புல்லை நாட்டி நீருற்றி வளர்க்கும் நிலையும் தோன்றி வேகமாகப்பரவி வருகிறது. காலைப் பொழுதை அறிவிக்கும் மலர்களின் கடமையை மக்கள் அறியாத வராயுள்ளனர். தேவாரப்பாடல்களில் பதிவு செய்யப்பட்ட மலர்ப் பண்பாட்டை இளந்தலைமுறை அறியவாய்ப் பில்லாது போய்விட்டது.

வழிபாடு சமயமாகப் பேணப்பட்டபோது புறச்சமயங் கள் சைவசமயத்தை, அதன் செயற்பாடுகளை அறியச் சான்றாக இருந்த மலர்கள் இன்று அருகிவருகின்றன. செயற்கை மலர்கள் வணிகநிலையில் பெரிதும் வரவேற் கப்படுகின்றன. மலர்ப் பண்பாட்டோடு நிலைபெற்ற தமிழ்ச் சொற்களின் பயன்பாடும் அற்று வருகிறது. பூ, வீ, அலரி, இதழ், தோடு, மடல், மலர், மொட்டு, கண்ணி, போது என மலரின் வளர்ச்சியைக் காட்டும் சொற்களும் வழக் கொழிந்து வருகின்றன. நமது முன்னோர் வாழ்வியலாகச் சமயம் விளங்கியதால் காலைப்பொழுதும் மாலைப் பொழுதும் உணரப்பட்டு வழிபாட்டு நடைமுறைகள் செயற்படுத்தப்பட்டன. சம்பந்தர் பாடல் இதனை விளக்கு கிறது.

**'காலையொடு துந்துபிகள் சங்கு குழல்யாழ்முழவு காமருசீர்**
**மாலைவழிபாடுசெய்துமாதவர்களேத்திமகிழ் மாகறலுளான்'**
**'இலையின் மலிவேனுனைய சூலம் வலமேந்தி யெரி புன்**
**சடையினுள்**
**அலைகொள் புனலேந்து பெருமான் அடியேத்த**
**வினையகலுமிகவே.'** ❋

# இளமையும் சமயமும்

- செல்வி செல்வஅம்பிகை நடராஜா -

**'இளமையிற் கல்வி சிலையிலெழுத்து', 'தொட்டிலிற் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்பவற்றிற்கிணங்க மிகச் சிறுவயதிலிருந்தே சமயப் பற்றையும் சமய வாழ்க்கை வாழ வேண்டும் என்ற ஆர்வத்தையும் மக்களிடம் ஏற்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றார் யாழ் - பல்கலைக்கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளர்.**

வாழ்வு இனிமையாக அமைதல் வேண்டும். வாழ்வை இனிமையாகச் செய்து கொள்வது அறிவுடைமை.ஒரு கட்டடத்திற்கு அத்திபாரம் மிக முக்கியமானது. அத்திபாரம் ஆடினால் கட்டடம் இடிந்துவிடும். அதுபோல் மனித வாழ்வுக்கு இளமைப்பருவம் அத்திபாரமாகத் திகழ்வது. இளமையில் பழகும் பழக்கம் இறுதிவரை நிலைக்கும்.

இளமைப்பருவம் இனிமையானது. மானிட வாழ்க்கையின் வளமான பருவம் அது. மனித வாழ்வினைச் செப்பனிடும் பகுதி. இளமைப் பருவத்தின் ஒரு பகுதி மாணவ வாழ்க்கையில் கழிகின்றது. மாணவர் வாழ்க்கை பிறரின் வாழ்க்கையிலிருந்தும் வேறுபட்டதாகும். கல்வியும் ஒழுக்கமும் மாணவனுக்கு இருகண்கள் போன்றவை. இன்றைய இளைஞர்கள் எதிர்காலத் தலைவர்கள். இவர்களே ஆசிரியர்களாக, வைத்தியர்களாக, பொறியியலாளர்களாக, கலைஞர்களாக, விஞ்ஞானிகளாக, சமயத்தலைவர்களாக, சமூகத் தொண்டர்களாக விளங்கப் போகின்றவர்கள். எனவே வருங்கால உலகம் என் கையில் உள்ளது என்ற உணர்வும் உறுதியும் ஒவ்வொரு இளைஞனுக்கும் இருக்கவேண்டும்.

இந்துசமயம் அன்பு, அறிவு, அறம் என்னும் மூன்று தத்துவங்களை உள்ளடக்கியுள்ளது. இந்து இளைஞர்கள் சமயத்தில் பற்றுடையவராக இருக்கவேண்டும். தமது சமயநெறியை மதிக்கவும் போற்றவும் முன்வர வேண்டும். "அன்பே சிவம்" என்றார் திருமூலர். எங்கெல்லாம் அன்பும் அறிவும் தொண்டும் இடம்பெறுகின்றனவோ அங்கெல்லாம் இறைவன் இருக்கின்றான். அந்தச் சிவத்தை நோக்கியே இளைஞர் சமுதாயம் செல்ல வேண்டும்.

இந்துசமயம் வளரவேண்டுமாயின் அதனை ஆதரிப்பவர்கள், வளர்ப்பவர்கள் உள்ளம் தெளிவாக இருக்க வேண்டும். இந்துசமயப் பற்றின் சூழலில் வாழும் இளம் உள்ளங்கள்தாம் சமயத்தை வளர்க்கும் வாழச் செய்யும். இளம் உள்ளத்தில் ஊற்றெடுக்கும் சமயப் பற்றுத்தான் பல்லாயிரக்கணக்கான உள்ளங்களைப் பற்றுக் கொள்ளச் செய்யும். காலச் சூழ்நிலை மாறிய போதிலும் அவ்வுள்ளம் மாறாது. "தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்" என்ற பழமொழிக்கேற்பச் சிறுவயதிலிருந்தே எவரொருவர் தனது வாழ்வியலைக் குறிக்கோளுடன் அமைக்கின்றாரோ அதுவே வயது முதிர்ந்த காலத்திலும் தொடரும்.

இந்துசமயத்திற்கு இளைஞர்கள் ஆற்றவேண்டிய பணியை நோக்குமிடத்து சம்பந்தர் பெருமான் நினைவே முன்நிற்கின்றது. சம்பந்தரின் இளம் உள்ளத்தில் படிந்த சைவப்பற்றுத்தான் பல உள்ளங்களைச் சைவத்திற்குத் திருப்பியது. சைவசமயத்திற்கும் செம்மொழித் தமிழிற்கும் சம்பந்தர் ஆற்றிய பணிகள் போற்றத்தக்கன. சைவ சமயத்தில் மறுமலர்ச்சியும் காலத்திற்கேற்ற கருத்துப் புரட்சியும் செய்த பெருமை சம்பந்தரைச் சாரும். **'மிண்டு மனத்தவர் போமின்கள் மெய்யடியார்கள் விரைந்து வம்மின்'** என்ற அறைகூவல் அவருடைய இளமைப் பருவத்தின் ஆளுமைத்திறத்திற்குத் தக்கசான்று. பக்தி இலக்கியத்திற்குப் பங்களிப்புச் செய்த சுந்தரரும் ஆண்டாளும் கூட இளைஞர்களாகவே சித்திரிக்கப்படுகின்றனர். நவீன இந்துசமய சீர்திருத்த இயக்கத்தை முன்னெடுத்துச் சென்ற ராஜாராம் மோகன்ராய், தயானந்த சரஸ்வதி போன்றோரும் இளைஞர்களாகவே இருந்துள்ளனர். **'எழுமின் விழிமின் குறிக்கோளை அடையும் வரை பணி செய்மின்'** என இந்து இளைஞர்களை நோக்கிக் குரல் கொடுக்கும் விவேகானந்தரும் ஓர் இளைஞனே. சீர்திருத்தச் சிந்தனைகளோடு பழைய மரபு பேணவும், ஆன்மீக நாட்டம் கொள்ளவும் விழுதுகளாக விளங்கியவர்கள் இந்து இளைஞர்களே.

இன்றைய சூழ்நிலையில் இளைஞர்களின் உள்ளம் இந்து சமயப் பற்றிலிருந்து விலகியதாகவே இருக்கின்றது. சமய வாழ்வினை நடத்துவதற்குரிய சூழ்நிலையில் பெரும்பாலான இளைஞர்கள் வாழவில்லை. ஐம்புலன்களுக்கும் இன்பமளிக்கும் வெளியுலகப் பொருள்களில் அவர்களின் உள்ளம் நாட்டம் கொண்டுள்ளது. புற வாழ்வினை நடத்த இளைஞர்களுக்கு இன்றைய உலகம் துணை செய்கின்றது. ஆனால் அகவாழ்வினை நடத்தத் துணை செய்வதாக இல்லை. இளைஞர் உள்ளம் சமயத்தில் பற்றுக் கொள்ளும் வண்ணம் சூழ்நிலைகளை மாற்றியமைக்க வேண்டும். வெளியுலக ஆடம்பர மோகம் அவர்களின் உள்ளங்களை ஈர்க்கா வண்ணம் வாழச்செய்ய வேண்டும். உள்ளம் தூய்மையுடன் விளங்கும்போது தான் சமயப் பற்றை வளர்க்க முடியும். கட்டுப்பாடான எளிய வாழ்க்கை, புலன்களை வெளியுலக ஆடம்பரங்களில் ஈடுபடுத்தாமை, சமயப் பெரியவர்களுடன் உறவு பேணல், இறைவழிபாட்டில் ஈடுபடல், இயற்கைச் சூழலுடன் மனம் ஒன்றப்பழகுதல் ஆகியவற்றை இளைஞர்கள் பின்பற்றினால் சமயப்பற்று ஏற்படும். இன்றைய இளைஞர்கள சமயத்தில் பற்றுக் கொள்ளும் வகையில் கல்வி முறையை அமைத்தல் வேண்டும். பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும் கற்பிக்கப்படும் கல்வி புற வாழ்வினை நடத்தத் துணைபுரிகின்றதேயன்றி அக வாழ்வினை நடத்தத் துணைபுரியவில்லை. அன்றைய இளைஞர்களுடைய உள்ளம் பண்பட அவர்களுக்குச் சமயக்கல்வியும் மூளைவளர அறிவியற் கல்வியும் கற்பிக்கப்பட்டன. உள்ளம் பண்பட்ட காரணத்தால் சமயத்தில் பற்றுக்கொண்டு சிறந்த அகவாழ்வு நடத்தினார்கள். அறிவியற் கல்வியைப் பெற்றதனால் புறவாழ்க்கையில் சிறந்த பங்குகொண்டு உயர் வாழ்க்கை நடத்தினார்கள். ஆனால் இன்றைய கல்வி நிலை இத்தகையதாக இல்லை. உள்ளத்திற்கும், மூளைக்கும் தகுந்த கல்வியை இளைஞர்களுக்கு அளித்தால்தான் சமயம் வளரும்.

சமயம் வாழ்க்கையோடு தொடர்புடைய ஒன்று. புறவாழ்வில் துன்பப்படும் மனம் அகவாழ்வோடு தொடர்புடைய சமயத்தில் அமைதி காண்கின்றது **'இளமையிற் கல்'** என்ற முதுமொழிக்கேற்பச் சமய உணர்வும் இளம் உள்ளத்திலேயே பதியப் பெறவேண்டும். இவ்விடத்தில் இராமகிருஷ்ண பரமஹம்சரின் கூற்றைத்தருவது பொருத்தமானதாகும். **'முற்றாத மூங்கிலை எளிதில் வளைக்கலாம். முற்றின மூங்கிலைப் பலவந்தமாக வளைக்க முயன்றால் ஒடிந்துபோகும். அதுபோல இளமையான மனத்தை இறைவனிடம் செல்லும்படி திருப்புவது எளிது. வயது முதிர்ந்தவனுடைய பழக்கப்படாத மனமோ அப்படித் திருப்ப முயலும் போதெல்லாம் பிடியை மீறிச் செல்லும்.'**

சமயம் மனிதனுக்கு அடிப்படையானது. அவ்வடிப்படை இளைஞர் உள்ளங்களில் எழுப்பப்படவேண்டும். அதற்குரிய சூழலை உருவாக்கித்தரவேண்டும். அப்பொழுதுதான் சமயத்தில் இளைஞர்களுக்குப் பற்று ஏற்படும். சமயமும் வளரும். ❋

உ



திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

# இந்து சாதனம்
## Hindu Organ

email: editor @ hindu organ. com

சர்வதாரி ௵ பங்குனி மாதம் ௴ ௧ஆம் ௳ (14.03.2009)

# வளரும் இளைஞர்களுக்கு வழிகாட்டியாவோம்

சிவனுக்குரிய விரதங்களுள் மாசி மாதத்து மகா சிவராத்திரிக்குச் சிறப்பான இடம் உண்டு. ஆண்டுக்கு ஒரு தடவை வரும் இந்த அரிய நன்னாளில் ஆகாரத்தை விலக்கி, அசதியை ஒதுக்கி, அத்தியாவசியத் தூக்கத்தைத் துறந்து ஆண்டவனின் அருளை நாடி அகில உலகிலுமுள்ள அடியார்கள் ஆத்மார்த்தப் பிரார்த்தனையிலும் வழிபாட்டிலும் ஈடுபடுவர்.

இந்த வழமையிலிருந்து சிறிதும் வழுவாமல் அனந்த கோடி அடியார்கள் பக்திக் கோலத்துடனும் பண்பாட்டுச் சீலத்துடனும் இவ்விரதத்தை இவ்வாண்டிலும் அனுஷ்டித்தனர் என்ற செய்தி ஒரு காதிலே தேனாகப் பாய்ந்து கொண்டிருந்த வேளையிலே, யாழ்ப்பாணத்தில் நடந்த - யாழ்ப்பாணத்தில் மட்டும் நடந்த - சில அசம்பாவிதங்கள் பற்றிய செய்தி, மறுகாதிலே தேளாகக் கொட்டத் தொடங்கியது!

இரவு ஒன்பது மணி தொடக்கம் அதிகாலை நான்கு மணிவரை நடைமுறையில் இருக்கும் ஊரடங்கு, அடியார்களின் வசதி கருதி, அன்றைய தினம் முற்றாக நீக்கப்பட்டிருந்தது. ஆலயங்களிலே விசேட அபிஷேகம், பூசை, வேத பாராயணம், பண்ணிசை, ஆன்மீகச் சொற்பொழிவு போன்றவை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. தெருவீதிகளில் திருக்கோவில்களை நோக்கிச் செல்லும் அடியவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தது.

இந்த வேளையில், எங்கிருந்தோ உந்துருளிகளில் வந்த இளைஞர்கள் சிலர், குறிப்பிட்ட ஓர் இடத்தில் தம் உந்துருளிகளிலிருந்து குதித்தனர். கற்களையும், பழைய மின்கம்பங்களையும் குறுக்கே போட்டு வீதித்தடைகளை ஏற்படுத்தினர்; பய பக்தியுடன் ஆலயங்களுக்குச் சென்றுகொண்டிருந்த அடியார்களிடம் அர்த்த மற்ற- அநாவசியமான கேள்விகளைக் கேட்டு வாய்த் தர்க்கத்தையும், வம்புப் பேச்சுக்களையும் வளர்க்க முயன்றனர். போதையில் மிதந்த அந்தப் புல்லர்களிடம் வாயைக் கொடுத்து, வட்டியும் முதலுமாக வாங்கிக்கட்ட விரும்பாமல், தம் **'மௌன யாத்திரை'** யை விரைவுபடுத்தித் தம்மைத் தாமே காப்பாற்றிக் கொண்டனர் அடியவர்கள்!

வேறோர் இடத்தில், வேலிக்குப் போட்டிருந்த தகரங்களையும், படலைகளையும் பிடுங்கி வீதிகளிற் குவித்துத் தம் வீரப்பிரதாபங்களை வெளிச்சம் போட்டுக் காட்டிக்கொண்டிருந்தனர் மற்றும் சிலர். பொதுப் பணிக் கட்டடமொன்றின் கண்ணாடிகளை அடித்து நொருக்கிக் கலாட்டா பண்ணுவதிற் களிப்படைந்து கொண்டிருந்தனர் மேலும் சிலர்.

சுருக்கமாகச் சொன்னால், புனிதமான அந்தப் பெரிய இரவிலே, அநியாயங்களையும், அக்கிரமங்களையும் அவிழ்த்து விட்டதன் மூலம், நாகரிக மக்களுக்கும், சமய நம்பிக்கைகளில் திளைக்கும் சைவப் பெருமக்களுக்கும் சவால் விடுவதிலும் சங்கடங்களை ஏற்படுத்துவதிலும், தாம் தனித் திருப்தி கொண்டிருந்ததை ஒருவித இறுமாப்புடன் பகிரங்கப்படுத்தியுள்ளார்கள் இளைஞர்கள் சிலர்.

இவர்கள் யார் என்பதையோ, எந்த ஊரைச் சேர்ந்தவர்கள் என்பதையோ ஆராய்ந்து பார்ப்பதற்கு நாம் விரும்பவில்லை ; அவற்றை, முக்கியமானவையாக நாம் கருதவுமில்லை.

காவல்துறையினரின் கவனத்திற்குரியவை அவை.

நமது கவலையெல்லாம் அந்த இளைஞர்கள் ஏன் அப்படி நடந்து கொண்டார்கள் என்பதைப் பற்றியதுதான்!

அவர்கள் தாமாகவே அப்படி நடந்து கொண்டார்களா? வேறு யாராவது அவர்களைத் தூண்டினார்களா? யார் யாரோ எப்படியெல்லாமோ நடந்துகொள்கின்றார்களே, நாங்கள் மட்டும் இப்படி நடந்து கொள்ளக் கூடாதா என அந்த இளைஞர்கள் நினைத்து விட்டார்களா? திடீரென்று கிடைத்த **"சுதந்திரத்தை"** - ஊரடங்கு நீக்கப்பட்டதை - இப்படிக் கொண்டாடலாம் எனத் தீர்மானித்தார்களா?

இவை பற்றி ஆழ்ந்து சிந்தித்து ஆக்கபூர்வமாகச் செயற்பட்டு, நிலையைச் சீராக்கும்படி பெற்றோர், பெரியோர், கற்றோர், கனவான்கள் ஒவ்வொருவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

வளரும் இளைஞர்களுக்குத் தம் வாக்காலும், வாழ்க்கையாலும் வழிகாட்ட வேண்டியது, வளர்ந்த முதியோர் எவரும் தட்டிக் கழிக்க முடியாத பொறுப்பு. ❋

# புண்ணியநாச்சியம்மை நினைவு தினம்



**புண்ணியநாச்சி அம்மையார் நாள் பெப்புரவரித் திங்கள் 19 ஆம் நாள் சபை நாவலர் மண்டபத்தில் நடைபெற்றது. சைவபரிபாலன சபைத் தலைவர் சிவநெறிப்புரவலர் த. சண்முகலிங்கம் தலைமையுரை ஆற்றுவதையும். சபைத் துணைத்தலைவர் சைவப் புலவர் மு. திருஞானசம்பந்தபிள்ளை, க. புஷ்ப நாதன், திருவாட்டி அருள்நங்கை சண்முகநாதன், பரீட்சைச் செயலர் இரா. செல்வவடிவேல், செயலர் இ. தவ கோபால் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும் இங்கு காண்க.**

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினர் ஆண்டுதோறும் புண்ணியநாச்சியம்மையார் நினைவு தினத்தைச் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர்.

இவ்வாண்டுக்கான நினைவு விழா 19.02.2009 வியாழக்கிழமை காலை சபை மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

விழா ஆரம்பமாவதற்கு முன்னர் யாழ் கடையிற் சுவாமி கோயிலில் விசேட பூசை வழிபாடு நடை பெற்றது,

சபையின் தலைவர் சிவநெறிப்புரவலர் த. சண்முக லிங்கம் அவர்கள் தலைமைதாங்கினார்கள். அஞ்சல் திணைக்கள யாழ் பிரதேச நிர்வாக உத்தியோகத்தர் க. புஷ்பநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். பண்ணிசை, திருக்குறள் மனனப் போட்டி களில் பரிசில் பெற்றவர்களுக்கு அப்பரிசில்களைப் பிரதம விருந்தினர் வழங்கிக் கௌரவித்தார்.

யாழ் உயர்கல்வி நிறுவன இயக்குநர் திருமதி அருள்நங்கை சண்முகநாதன் **"சமய வளர்ச்சியில் பெண்கள்"** எனும் தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களின் பண்ணிசை நிகழ்வும் நடைபெற்றது.

யாழ் இராமநாதன் கல்லூரி மாணவி துஷ்யந்தி நாகராசா என்பவரின் பண்ணிசை அனைவரது பாராட்டு தலையும் பெற்றது. இம் மாணவி கட்புலன் இழந்தவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். மாகேஸ்வர பூசையும் நடைபெற்றது. ❋

## பூசையின் மகிமை

**பொறிகளும் புலன்களும் ஒருங்கியைந்து செய்யும் வழிபாடு தூய்மையானதாக – அநுபவத்தோடு கூடியதாக – ஆழமானதாக – காதல் தன்மைமிக்குடையதாக இருக்கும். அதனாலன்றோ சிவநெறியின் அகப்பூசையும் புறப்பூசையும் இன்றியமையாதனவாக வலியுறுத்தப் பெறு கின்றன.**

**தவத்திரு குன்றக்குடி அடிகளார்.**

## வீடும் வளமும்

**வீடு–அது சொர்க்கமாக இருக்கும்வரை நோயாளியும் திடமாகவே இருக்கிறான். அது நரகமாகும் போது, ஆரோக்கியமானவனே கூட நோயாளியாகி விடுகிறான்.**

**தவத்திரு குன்றக்குடி அடிகளார்.**

## சேக்கிழாரின் விருப்பம்

**ஆற்றல் வாய்ந்த கவிஞராக, கல்வியாளராக, சிந்தனையாளராகச் சேக்கிழார் விளங்கினார்.**

**கல்வி, கலை, இலக்கியப் பாரம்பரியம் என்பவற்றை ஒருமுகப்படுத்துவதாகப் பெரியபுராணம் அமைந்துள்ளது.**

**சைவம் என்னும் குடையின் கீழ் சோழப் பேரரசைக் கொண்டு வரவேண்டும் என்ற சேக்கிழாரின் விருப்பம் பெரியபுராணத்தில் வெளிப்படுகின்றது.**

*பெரியபுராணம் – ஒரு வாழ்வியல் – கருத்தரங்கில்*
**பேராசிரியர் சி. சிவலிங்கராசா**



# மாணவர் பகுதி



email: exame @ hindu organ. com

**மாணவச் செல்வங்களே!**

வணக்கம். நீங்கள் அறிந்து வைத்திருக்க வேண்டிய சமய உண்மைகளை உங்களுடைய அறிவுக்கும், அநுபவத்திற்கும் ஏற்றமுறையில் மிகத் தெளிவான – இலகுநடையில் வெளியிடுவதற்காகவே இந்தப் பகுதியைப் பயன்படுத்துகின்றோம்.

இப்பத்திரிகையில் வெளியாகும் ஏனைய விஷயங்களையும் நீங்கள் வாசிக்கலாம்.

வாசிக்க வேண்டும்.

இந்தக் காலத்து மாணவர்களிடம் வாசிப்புப் பழக்கமே இல்லை என்ற ஒரு கருத்து ஆசிரியர்கள், பெற்றோர்களிடம் உண்டு. அந்தக் கருத்து ஆதாரமற்றது என்பதை நீங்கள் நிரூபிக்க வேண்டும் என்பது எமது விருப்பம்.

'வாசிப்பு மனிதனைப் பூரணமானவனாக ஆக்கும்' என்பதை நினைவில் இருத்தி, நல்ல பயனுள்ள கட்டுரைகளை – நூல்களை நீங்கள் வாசிக்கவேண்டும்.

இந்த இதழில் இடம்பெற்றுள்ள ஆசிரியத் தலையங்கத்தை வாசித்த பின் உங்கள் கருத்துக்களை எமக்கு எழுதுவீர்களா?

**இந்துசாதனம்.**
கல்லூரி வீதி, நீராவியடி.
யாழ்ப்பாணம்.


- குருநாதன்

## சைவசமய அறிவை வளர்ப்போம்

# விநாயகர்


**தொகுத்தளிப்பவர்: இரா. செல்வவடிவேல்**

**வினா:10.10. க்ஷிப்ர கணபதி:**




கொம்பு, கற்பகக் கொடி, கயிறு, மாவெட்டி ஆகியவற்றை நான்கு கரங்களிலும் ஐந்தாம் கரமாக துதிக்கையில் இரத்தினமிழைத்த தங்கக் குடத்தையும் கொண்ட வடிவம்.

**வினா 10.11. ஹேரம்ப கணபதி:** இரண்டு



கைகளிலும் அபய முத்திரையையும் வரத முத்திரையையும் மற்ற எட்டுக் கைகளில் முறையே கயிறு, தந்தம், அக்ஷமாலை, மாவெட்டி, கோடரி இரும்பாலான உலக்கை, மோதகம், பழம் ஆகியவற்றைக் கொண்ட சிங்கத்தின் மீது அமர்ந்துள்ள தோற்றம்.

**வினா 10.12. லட்சுமி கணபதி:**




கிளி, மாதுளம்பழம், இணைந்த மாணிக்கமான குடம், மாவெட்டி, கயிறு, கற்பகக்கொடி, கத்தி ஆகியவற்றினால் ஒளிமயமாகிய நீலவர்ண ஆம்பல் மலர்களைக் கையில் கொண்ட இருதேவியரை அருகில் அமைத்துக் கொண்ட வரம் தரும் கையையுடைய திருமேனி.

**வினா: 10.13. மகா கணபதி:**




சென்னியில் பிறை சூடியவரும் தமது மடியில் கையில் தாமரை மலருடன் அமர்ந்துள்ள நாயகியினால் தழுவப் பெற்றவரும்,மாதுளை கதை, கரும்பு, வில், சக்கரம், தாமரை மலர், கயிறு, நெற்கதிர், தமது கொம்பு ஆகியவற்றைப் பத்திருக்கரத்திலும் துதிக்கையில் இரத்தின கலசம் தரித்த திருமேனி.

**வினா: 10.14. விஜய கணபதி:**




கயிறு மாவெட்டி, தன் கொம்பு, மாம்பழம் ஆகியவற்றைக் கொண்ட மூஷிக வாகனத்தையுடைய வடிவம்.

**வினா: 10.15. நிருத்த கணபதி:**



பாசம், அங்குசம், அப்பம், உலக்கை, தந்தம் ஆகியவற்றைத் தமது ஐந்து கரத்திலும் கொண்டுள்ள வடிவம்.

**வினா: 10.16. ஊர்த்வ கணபதி:**



நீலோத்பலம், நெற்கதிர், தாமரை மலர், கரும்பு, வில் பாணம், நீண்ட தந்தம், கதை ஆகியவற்றை எட்டுக் கைகளிலும் கொண்ட வடிவம்.


→

**வினா: 10.17. ஏகாட்சர கணபதி:**



செந்நிறமானவர், செம் பட்டாடையர், செம் மலர் மாலையர்,பிறை முடியர், முக்கண்ணர், குறுந்தாளர், குறுங் கையர், மாதுளம்பழம், பாசம், அங்குசம், வரதம் இவை தாங் கிய கரங்களையுடையவர். யானை முகவர், பதுமாசனத்திலிருப்பவர், பெருச்சாளி வாகனர்.

**வினா: 10.18. வர கணபதி:** செவ்வண்




ணர், யானைமுக வர், முக்கண்ணர், பிறைமுடியர்,பாசம், அங்குசம் தரித்த வர். தேன் நிறைந்த கபால பாத்தி ரத்தை ஏந்தியவர். பிறைமுடியர்.

**வினா: 10. 19. திரயாக்ஷர கணபதி:**



அசைகின்ற செவிகளாம் சாமரைகளை உடைய வர். பொன்னிறமானவர். நான்கு கரங்களை உடையவர். பாசம், அங்குசம், தந்தம், மாம் பழம் இவற்றைத் தாங்கி யவர். துதிக்கை நுனியில் மோதகம் உடையவர்.

**வினா: 10.20. க்ஷிப்பிரசாத கணபதி:**



பாசம், அங்குசம், கற் பகக் கொடியின் சுவை தரும் மாதுளம் பழம், துதிக்கையில் தாமரை மொட்டு இவற்றைத் தரித்தவர். இளம்பிறையொத்த நெற்றியையுடையவர். திருவாபரணங் கள் பல அணிந்தவர். பேழை வயிறு உடையவர்.

**வினா: 10. 21. ஹரித்திரா கணபதி:**



மஞ்சள் நிறமானவர். நான்கு கரங்களை யுடையவர். அவற்றில் பாசம், அங்குசம், தந் தம், மோதகம் இவற் றைத் தரித்திருப்பவர்.

**வினா: 10. 22. ஏகதந்த கணபதி:**



பேழை வயிற்றுடன் நீல மேனியர். கோடாரி, அட்சமாலை, லட்டு, தந்தம் இவற்றை உடை யவர்.

**வினா: 10. 23. சிருஷ்டி கணபதி:**



பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் இவற்றைக் கரங்களில் ஏந்தியவர். பெருஞ்சாளி வாகனத் தையுடையவர். சிவந்த திருமேனியர்.

**வினா: 10. 24. உத்தண்ட கணபதி:**



நீலம், தாமரை, மாதுளம் பழம்,கதை, கரும்புவில், ரத்ன கலசம், பாசம், நெற்கதிர், மாலை இவற்றை ஏந்திய பத் துக் கைகளை உடையவர். அழகிய தாமரைப்பூவை ஏந்திய பொன் மேனி யனாகிய தேவியைத் தழுவுபவர்.

**வினா: 10.25 ரணமோசன கணபதி:**



பாசம், அங்குசம், தந் தம், நாவற்பழம் இவ ற்றைத் தரித்தவர். வெண் பளிங்கு நிற மேனியர். செந்நிறப் பட்டாடையுடுத்தியவர்.

**வினா: 10.26 துண்டிகணபதி:**



அட்சமாலை, கோடாரி, ரத்னகலசம், தந்தம் இவற்றை ஏந்தியவர்.

**வினா: 10. 27 துவிமுக கணபதி:**



தந்தம், பாசம், அங்கு சம், ரத்னபாத்திரம், இவற்றைக் கையில் ஏந்தியவர். மயில் நீல மேனியர். செம்பட் டாடையும், ரத்தின கிரீடமும் அணிந்த வர். இருமுகம் உடையவர்.

**வினா: 10. 28.மும்முக கணபதி:**



வலது கையில் கூரிய அங்குசம், அட்சர மாலை, வரதம் இவ ற்றை உடையவர். இடது கைகளில் பாசம், அமுதகலசம், அபயம், இவற்றை உடையவர். பொற்றாமரை யாசனத்தின் பொருட்டில் மூன்று முகங் களோடு எழுந்தருளியிருப்பவர்.

**வினா: 10. 29. சிங்க கணபதி:**



வீணை, கற்பகக்கொடி, சிங்கம், வரதம் இவ ற்றை வலது கைகளில் தாங்கியவர். தாமரை, ரத்ன கலசம், பூங் கொத்து, அபயம் இவை யமைந்த இடது கைகளையுடையவர். வெண்ணிறமேனியர். யானை முகவர். சிங்க வாகனத்தில் எழுந்தருளியிருப் பவர்.

**வினா: 10.30 யோக கணபதி:**



யோகநிலையில், யோக பட்டம் தரித்து, இளஞ் சூரியனது நிறமொடு ஒளிர்ந்து இந்திர நீலநிற ஆடையை உடுத்தி, பாசம், அட்சரமாலை யோக தண்டம், கரும்பு இவற்றை ஏந்தி இருப்பவர்.

**வினா: 10. 31 துர்கா கணபதி:**



உருக்கிய பசும் பொன் னிறம், எட்டுக்கை, பெரியமேனி, அங்குசம், பாணம், அட்சரமாலை, தந்தம், இவைகளை வலது கைகளிலும், பாசம், வில், கொடி, நாவற்பழம் இவைகளை இடது கைகளிலும் உடையவர்.செந்நிற ஆடையுடையவர்.

**வினா: 10. 32. சங்கடஹர கணபதி:**



இளஞ்சூரியன் போன்ற நிறத்தோடு, இடப் பாகத் தொடையில் அம்மையை உடைய வர். அம்மை பொன் னிற மேனியளாக நீலப்பூவை ஏந்திய வளாக இருப்பாள். வலது கையில் அங்குசம் வரதம் உடையவர். இடது கையில் பாசம், பாயச பாத்திரம் ஏந்தி யவர். செந்தாமரைப் பீடத்தில் நிற்பவர். நீல நிற ஆடையை அணிந்தவர். ❋

(வளரும்)

# வண்ணை வைத்தீஸ்வரன் கோவில்

**– சொல்லின் செல்வர் இரா. செல்வவடிவேல் –**

உலகம் தோன்றிய காலம் முதலே மக்களிடம் அன்பை வளர்க்கும் பணியைச் சைவசமயம் செய்து வருகின்றது. அன்பை வளர்ப்பதற்கு இறைபக்தி உறு துணையாக இருக்கும். ஆலயங்களுக்குச் சென்று, ஆலய மூர்த்தங்களைத் தரிசிப்பது பக்தியைத் தூண்டி வளர்க்கும். அதனாலேதான் ஊர்கள் தோறும் கோயில் களை அமைக்கும் வழக்கம் பண்டுதொட்டே நம்மத்தி யில் இருந்துவருகின்றது.

வண்ணை வைத்தீஸ்வரன் கோவில் எனச் சுருக்க மாக அழைக்கப்படும் ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தானம் இலங்கையிலுள்ள புராதன ஆலயங்களுள் ஒன்று. இக் கோயில் கி.பி 1790 இல் கட்டப்பட்டது. தஞ்சை அரசபீடத்தில் ஆட்சி செய்து வந்த மகாராஷ்ர மன்னன் சத்திரபதி பிரதாப்சிங் மகா ராசாவின் அநுமதியுடனும் அனுசரணையுடனும் சிற்ப சாத்திர வல்லுனரான ஸ்ரீகண்ணாயிர ஸ்தபதியார் என்ப வரைத் தலைமையாகக் கொண்ட சிற்பாசிரியர் குழுவை கோபாலன் செட்டியார் வைத்திலிங்கம் செட்டியார் இலங்கைக்கு வரவழைத்து வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலையும் அதன் பரிவாரக்கோயில்களான வேம்படி சித்தி விநாயகர் கோவில், பண்ணை மீனாட்சி அம்மன் கோவில், தட்டாதெரு ஐய னார் கோயில், காளியம் மாள் கோயில், கற்கட்டு வைரவர் கோயில் ஆகிய வற்றையும் கட்டினார்.

**யாழ் – வண்ணை வைத்தீஸ்வரப் பெருமானின் பெருந்திருவிழா பங்குனி மாதம் 8 ஆந் திகதி (21.03.2009) சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. நகரின் மத்தியில் இராஜகோபுரத்துடன் கம்பீரமாகக் காட்சியளிக்கும் இவ்வால யத்தைப் பற்றிய பல தகவல்களைத் தருகின்றார் இரா. செல்வ வடிவேல். ஆலய அமைப்பு தொடர்பான படங்கள் 16 ஆம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ளது.**

சைவ ஆலயங்களை இடித்தும், தங்கள் சமயத் தைப் பரப்பியும் வந்த ஒல்லாந்தர் மத்தியில் சைவத்தை யும் தமிழையும் வளர்க்க வைத்திலிங்கம் செட்டியார் அரும்பாடுபட்டு வைத்தீஸ்வரன் கோவிலை அமைத்தது போற்றுதற்குரிய தொண்டாக அமைகிறது.

வண்ணை வைத்தீஸ்வரன் கோவில், மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றும் அமையப்பெற்ற சிவாலயமாகும். இத்தலத்தின் தீர்த்தம் வண்ணைமேற்கிலுள்ள வில் லூன்றி என்னும் சமுத்திர சங்கம தீர்த்தமாகும். இத் தீர்த்தமும் அதனைச்சுற்றியுள்ள நிலங்களும் "வில்வ ராயன் குளக்கரையும், மருதோண்டிக்காடும்" (கண்ணா புரம்) என்ற ஆதனத்தின் பெயரால் அழைக்கப்பட்டு வருகின்றன.

ஆலயத்தின் இராஜகோபுரப்பணிகள் நீண்டகால மாகத் தடைப்பட்டிருந்தன. தற்பொழுதுள்ள ஆலய நிருவாகத்தின் முயற்சியினால் அழகிய இராஜகோபுரம் (ஸ்தூலலிங்கம்) யாழ் நகர் மத்தியில் கம்பீரமாகக் காட்சி தருகிறது. இந்த இராஜகோபுரம் 70 அடி உயர மானது. பஞ்சதளங்களைக்கொண்டது. ஐந்து தளங் களைக் கொண்ட வாயில்கள் உடலின் ஐம்பொறிகளை யும் குறிப்பவையாக அமைகின்றன. சுடலையில் நடன மாடும் எம் இறைவனை நினைவுக்குக் கொண்டுவரும் வகையில் இராஜகோபுரம் சாம்பலின் நிறத்தில் அமைந் துள்ளமை மிகவும் சிறப்பான அம்சமாகும்.

வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் அமைக்கப் பட்டுள்ள இறை திருவுருவங்கள் தனிச்சிறப்புடையவை யாகும். தெற்கு நோக்கி கல்லால மரத்தின் கீழ் வீற்றி ருக்கும் தட்சணாமூர்த்தியை

**'நால்வருக்கு கல்லால நிழலில் நல் உபதேசம் நவிலுற்ற மவுன லிங்கம்'**

என்று இக்கோவில் பதிகம் கூறுகின்றது. ஸ்ரீலஸ்ரீ ஆறு முகநாவலர் பெருமான் தினமும் இச்சந்நிதியில்தான் நிஷ்டையிலிருந்து அருள் பெற்றார் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

ஆலயத்தில் அமைந்துள்ள நர்த்தன விநாயகர், ஏகபாதர், லிங்கோற்பவர், பிரமா, துர்க்கை, ஸ்ரீதுர்க்கை வடிவங்கள் தனிச்சிறப்பானவையாகும். இராமலிங்கேஸ் வரர், முன்னைவனேஸ்வரர், வேதபுரீஸ்வரர், விஸ்வ நாதேஸ்வரர், சோமசுந்தரேஸ்வரர் ஆகிய பஞ்சலிங் கங்கள் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளன.

ஆலயத்தில் அறுபத்து மூன்று நாயன்மார்களின் திருவுருவச்சிலைகள் பிர திஷ்டை செய்யப்பட்டுள் ளன. தொண்டர்களை வழி படுவது அவர்கள் நெறி யில் நிற்பதற்கு மக்களுக்கு உதவும் என நம்பலாம்.

இந்த ஆலயத்தின் பரிவாரக்கோயில்கள் முக்கி யத்துவமுடையவையாகும். ஆலயத்தாபகர்களினால் ஒல்லாந்தர் காலம் முதல் வழிபட்டு வந்த விநாயகர் பெருமான் வேம்படிப்பிள்ளையார் ஆவார். இவ்வாலயம் காங்கேசந்துறை வீதியில் கடைத்தெருவில் அமைந் துள்ளதால் கடைத்தெருப்பிள்ளையார் எனவும் அழைக் கப்பட்டு வருகிறது.

வண்ணார் பண்ணை மேற்கில் அமைந்துள்ள ஐய னார் கோயில் அரிகரபுத்திர ஐயனார் என்று அழைக் கப்படுகிறது. வைத்தீஸ்வரன் கோயிலின் சிவன் மகோற் சவத்தின் போது பூர்வாங்க கிரியைகள் சில பரிவாரக் கோயிலில் இடம்பெறும். மாசிமாதத்தில் கொடியேற்றம் ஆரம்பமாகும் முன்னர் வரும் தைப்பௌர்ணமியில் வைத்தீஸ்வரன் கோவிலிலுள்ள பூரணை புட்கலை சமேதராக எழுந்தருளும் அரிகரபுத்திர ஐயனார் யானை வாகனத்தில் ஐயனார் கோவிலுக்குச் சென்று காப்புக் கட்டும் நிகழ்ச்சி நடைபெறும்.

பிடாரி அல்லது பத்திரகாளி என்று அழைக்கப்படு கின்ற மற்றுமொரு பரிவாரக்கோயிலான காளி கோயில் வண்ணை மேற்கில் சிவப்பிரகாசம் வீதிச்சந்தியில்

⟶

# வண்ணை வைத்தீஸ்வரன் கோவில்

அமைந்துள்ளது. சிவன் மகோற்சவத்திற்கு முன்னர் சிவன் இடப வாகனத்தில் எழுந்தருளிச்சென்று காப்புக் கட்டி வரும் நிகழ்வு இடம்பெறும். நவராத்திரி திரு விழாவின் இறுதியான விஜயதசமியில் சிவன் கோயி லின் சந்திரசேகர மூர்த்தம் குதிரை வாகனத்தில் பரி வாரக்காளி கோயிலுக்கு வந்து வாழைவெட்டி திரும்பு தல் இடம்பெறுகிறது.

பண்ணைப் பகுதியிலுள்ள எல்லைக்கோவிலாக முத்து மாரியம்மன் பரிவாரக்கோயில் அமைந்துள்ளது. அண்மைக்கால நாட்டுநடப்பினால் ஆலயம் முற்றாகச் சேதமடைந்தது. தற்போது மீண்டும் ஆலயம் புனரமைக் கப்பட்டுள்ளது. சிவன்கோயில் கொடியேற்றத்திற்கு முதல் வரும் செவ்வாய் அல்லது வெள்ளிக்கிழமை பண்ணை ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோயிலில் விசேட அபிடேகம் இடம்பெறும்.

வேம்படிப் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமை யில் அமைந்திருக்கும் மற்றைய பரிவாரக்கோயில் கற் கட்டு வைரவர் கோவிலாகும். இங்கும் சிவன் உற்ச வத்திற்கு முன்னர் விசேட அபிடேகம் நடைபெறும். இலங்கையிலேயே இத்தகைய பரிவாரக் கோவில்களைக் கொண்ட ஆலயம் வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயம் மட்டுமே. இப்பரிவாரக்கோயில்களும் சிறப்பாக நடை பெற்று வருகின்றன.

வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில் நடைபெறும் பூசைகள், தமிழகம் சீர்காழியில் உள்ள வைத்தீஸ்வரன் கோவில் முறைகளை அடிப்படையாகக் கொண்டவை யாகும். மாதசங்கிராந்தித்தீர்த்தம், பிரதோஷ அபிடேகங் கள், சதுர்த்தி, கார்த்திகை உற்சவம், நாயன்மார்கள் குருபூசை உற்சவம், திருவாதிரை, சிவராத்திரி போன்ற முக்கிய தினங்களில் சிறப்பான பூசைகள் நடைபெற்று வருகின்றன.

ஆலயங்களில் நடைபெறும் நித்திய பூசைகளில் ஏற்படும் குறைகளை நிவர்த்திசெய்ய நடைபெறுவது நைமித்திய உற்சவங்கள் ஆகும். வருடந்தோறும் குறிப்பிட்ட காலப்பகுதியில் நடைபெறுவது நைமித்திய உற்சவங்கள் ஆகும். நைமித்திய உற்சவத்தில் சிறப் பானது மகோற்சவம் ஆகும். இங்கு மகோற்சவம் சிவன் மகோற்சவம், தேவி மகோற்சவம் என இரு முறை அனுட்டிக்கப்படுகிறது. சிவன் உற்சவம் வருடந்தோறும் பங்குனி உத்திரதினத்தைத்தீர்த்தமாகக் கொண்டு 19 நாட்கள் நடைபெறும். இந்த மகோற்சவத்தில் இரண்டாம் நாள் முதல் நான்காம் நாள்வரை விநாயகர் உற்சவ மும் நான்காம் நாள் மாலை முதல் ஏழாம் நாள்வரை முருகனுக்குரிய உற்சவமும் நடைபெறும். எட்டு முதல் 10 ஆம் நாள்வரை பக்த உற்சவம் நடைபெறுகிறது. இதில் ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்க வாசகருக்கு வசந்தமண்டபத்தில் பூசை நடைபெறும். பத்தாம் திருவிழா அன்று மாலை சிவன் உற்சவம் ஆரம்பமாகிறது. 18 ஆம் நாள் பஞ்சரதோற்சவம் நடை பெறும். விநாயகர், முருகன், அம்பாள், சண்டேஸ்வரர் மூர்த்திகளுடன் சோமஸ்கந்தப் பெருமானும் இரதத் தில் வலம்வருவார்கள். 19 ஆம் நாள் பங்குனி உத் திரத்தில் ஆலயத்தில் சிறப்பாக அமைந்துள்ள "சித்தா மிர்த புஷ்கரணியில்" தீர்த்த உற்சவம் நடைபெறும்.

இவ்வாலயத்தில் நடைபெறும் தேவி உற்சவம் ஆடிப்புரத்தைத் தீர்த்தத்தினமாகக் கொண்டு பத்துத் தினங்கள் நடைபெறும். ஸ்ரீபாலாம்பிகையின் உற்சவ மூர்த்தியாக ஸ்ரீராஜராஜேஸ்வரி அம்பாள் எழுந்தருளி யாகி அம்பாளின் சந்நிதானத்திற்கு முன்பாகவுள்ள கொடித்தம்பத்தில் கொடியேற்றம் நடைபெறும். இவ் வாலய மகோற்சவங்கள் ஆகம முறைப்படி காலாகால மாக நடைபெற்று வருகின்றன.

தவசீலரான திருமூல நாயனார் இலங்கையைச் "சிவபூமி" என்றழைத்தார். யாழ் மாவட்டத்தில் அமைந் துள்ள சிறப்பான சிவன் ஆலயம் வண்ணை வைத்தீஸ் வரன் ஆலயம் எனக்கூறின் மிகையாகாது. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் தன் முதல் விரிவுரையை "ஆயத்த மில்லை" என்ற தலைப்பில் இவ்வாலய வசந்தமண்ட பத்தில் ஆரம்பித்தார். அதன் பின்னர் அவர் பரம்பரையில் வந்த வித்துவான் பொன்னம்பலபிள்ளை, சங்கர சுப்பையா சுவாமிகள், நாகலிங்க சுவாமிகள், பண்டிதர் மாணிக்கத்தியாகராஜர், மணிபாகவதர், வீ.கே.ஆறுமுகம் போன்றவர்கள் அவ்வப்போது சைவத்தையும் தமிழையும் வளர்க்கும் நோக்கில் பிரசங்கங்களைச் செய்து வந்தார்கள்.

தேவார இசைமணி அருளிசையரசு தாவடியூர் கே. எஸ். ஆர். திருஞானசம்பந்தன் அவர்கள் தேவஸ் தான ஓதுவாராகத் தற்போது தொண்டாற்றி வருகி றார்கள். இலங்கைச் சிவபூமியின் வரலாற்றில் முக்கிய மான இடம்பிடித்துள்ள வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தின் வசந்தமண்டபம் அனர்த்தத்தால் சிதைவடைந்துள்ளது. ஆலயத்தின் வசந்தமண்டபமும் புனரமைக்கப்பட்டு சைவமும் தமிழும் வளர்க்கும் பாரிய பணியைப் பக்திபூர்வமாக நடைபெறச்செய்யும் பொறுப்பு ஆலய நிர்வாகத்தினருக்கும் சைவத்தமிழ் மக்களுக்கும் உண்டு.

**'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'**

❋

# இந்தோநேசியாவில் இந்துத் தமிழர்கள்

- ஆத்மஜோதி நா. முத்தையா -

## தமிழின் தாக்கம்

சுமாத்திராவின் தலைநகரம் மேடான் ஆகும். இலங்கைத் தேயிலைத் தோட்டங்களுக்குத் தென்னிந்தியா விலிருந்து தமிழர் கொண்டு வரப்பட்டதுபோலவே இந்தோநேசியாக் கரும்புத் தோட்டங்களுக்கும் மலேசியா விலிருந்தும் தென்னிந்தியாவிலிருந்தும் தமிழர் கொண்டு வரப்பட்டனர். இவர்களில் ஒரு பகுதியினர் அரசாங்கம் நடத்திய புகையிலைத் தோட்டங்களிலும் பிரித்தானிய கொம்பனிகள் நடத்திய புகையிலைத் தோட்டங்களிலும் வேலைசெய்தனர். கொம்மியுனிசுக்களின் ஆட்சி ஓங்கிய காலத்தில் தோட்டப் பகுதிகளிலிருந்த தமிழர்கள் மேடான் நகரை நோக்கி வந்து குடியேறினர். கையில் பணம் உள்ளவர்கள், இந்தியாவோடு தொடர்புள்ளவர்கள், இந்தியாவுக்கே போய்ச் சேர்ந்து விட்டனர். மற்றையோரில் பெரும்பான்மையினர் மேடான் நகரைச் சுற்றிக் குடியேறினர்.

**பிறநாடுகளில், பல்வேறு மொழிகளைப் பேசுவோர் மத்தியில் தமிழர்கள் வாழும்போது, தமிழ் மொழி எவ்வகையான பாதிப்புக்களுக்கு உள்ளாகின்றது என்பதைக் கட்டுரையிற் காணலாம்.**

இப்பொழுது நகரின் மத்தியிலே விளையாட்டு மைதானமாக இருக்கும் பகுதி ஒரு காலத்திலே நீண்டு அகன்று பெரிய மைதானமாகக் காணப்பட்டது. அப்பகுதி மைதானம் என்றே அழைக்கப்பட்டது. அந்தத் தமிழ்ப் பெயரே மேடான் ஆகியது.

இங்கு இன்றும் பல தமிழ்ச் சொற்கள் உருத்திரியாமலே வழக்கில் இருந்துவருகின்றன. உருத்திரிந்த சொற்களை நோக்கும்போது இந்தியாவில் ஏற்பட்ட ஒரு சம்பவம் நினைவுக்கு வருகின்றது. ஹமில்ரன் என்ற ஒரு வெள்ளைக்காரர் ஒரு பாலம் கட்டினார். அப்பாலத்திற்கு "ஹமில்ரன் பிரிட்ஜ்" என்று பெயர் வைக்கப்பட்டது. கிராமிய மக்களால் அச்சொல் உச்சரிக்கப்பட முடியவில்லை. அவர்கள் உச்சரிப்பு மருவி மருவி "அம்பட்டன் பிரிட்ஜ்" ஆகி, மறுபடியும் ஆங்கிலப்பெயராக மாற்றப்பட்டபோது "பாபர் பிறிட்ஜ்" என்று பெயரைப் பெற்றது.

இந்தோநேசியாவிலும் பல தமிழ்ப் பெயர்கள் உச்சரிப்பு மாறுபாட்டால் உருமாற்றம் பெற்றுவிட்டன.

தண்ணீர் சேர்த்து வைக்கும் பெரியடாங்கிகள் தீர்த்தநாடி என்று அழைக்கப்படுகின்றன. இச்சொற் பிரயோகத்தைத் தமிழ்நாட்டிலோ அன்றி ஈழத்திலோ காணமுடியாது. ஆகாயவிமானம் கருடா என்று அழைக்கப்படுகிறது. அரசாங்கச் சின்னமும் கருடனேயாகும். தர்மபுத்திரா, குருஇயக்கம், குருபக்தி, சூரியா, சந்திரா, நிர்வாணா, இராமா போன்ற சொற்கள் பெரிய ஸ்தானங்களுக்குப் பெயர்களாக அமைந்துள்ளன. சிலோன், இலங்கை, மதறாஸ், டில்லி, கொழும்பு, கல்கத்தா போன்ற பெயர்கள் வீதிகளுக்கு இடப்பட்டுள்ளன.

சில தமிழ்ச் சொற்கள் பல விதத்தில் உருமாற்றம் பெற்று முந்திய உருவத்தை எவ்விதத்திலும் அறிந்து கொள்ள முடியாதவாறு சிதைந்து விட்டன. இந்தோநேசிய மொழிக்கு அதற்கென்று தனியாக எழுத்து இல்லை. பேச்சுவழக்கில் உள்ள மொழிக்கு உச்சரிப்பின்படி லத்தீன் எழுத்துக்களே பயன்படுத்தப்படுகின்றன. மேல்நாட்டு மொழிகளுக்குப் பொதுவாக உபயோகப்படுவது லத்தீன் எழுத்துக்களே. இன்னுந் தெளிவாக்கினால் ஆங்கில மொழியிலுள்ள இருபத்தாறு எழுத்துக்களுமே அவையாகும். அவைகளில் பிரதானமான உயிர் எழுத்துக்கள் ஐந்து. மற்றவை மெய்யெழுத்துக்கள். இந்தோநேசியன் மொழியிலும் இதே சட்டந்தான் பயன்படுத்தப்படுகின்றது. இவ்வைந்து எழுத்துக்களில் ஒன்றோ அல்லது அதிகமோ இல்லாது வார்த்தை அமையாது. அமைந்தால் சப்திக்காது.

இங்கு போர்ததுக்கீசியர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர், யப்பானியருடைய ஆட்சிகளின்போது தமிழ்ச் சொற்களில் எதிர்பாராத மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன.

தமிழில் உயிர்மெய் எழுத்துக்கள் இருப்பது போல் லத்தீனில் உயிர்மெய் எழுத்துக்கள் இல்லை. ஆகவே எப்பொழுதும் மெய் எழுத்துடன் உயிர் எழுத்தைப் பிணைத்தாலன்றி வார்த்தை சப்திக்காது. தமிழில் இருப்பது போல் அ, இ, உ, எ, ஒ என்ற குறில் எழுத்துக்களும், ஆ, ஈ, ஊ, ஏ, ஓ போன்ற நெடில்களும் லத்தீன் எழுத்துக்களில் வெவ்வேறாக இல்லை. குறிலுக்கும் நெடிலுக்கும் உயிரெழுத்துக்கள்தான் உபயோகப்படும்.

X,Y,Z ஆகிய மூன்று எழுத்துக்களும் மலாய் மொழிக்கு அதிகம் உபயோகம் இல்லை. Y என்னும் எழுத்து மெய் எழுத்தாகக் கூறப்பட்டாலும் அது உயிர் எழுத்தாகவும் உபயோகப்படுவதுண்டு. இரண்டு அல்லது மூன்று உயிர் எழுத்துக்கள் சேர்வதால் உச்சரிப்புப் பேதப்படும் விதத்தைக் கீழே உள்ள உதாரணங்கள் கொண்டு அறியலாம்.

| | |
|---|---|
| OO, OE, U | ஊ |
| OEI, UI | உய் |
| EI | ஏய் |
| EU, IEW, IU | இய |
| IA | இயா |
| AI | ஐ |
| OI, OY | ஓய் |
| EO, IO | இயோ |
| OEA, UA | உவா |
| OA | ஓவா |
| IE, EE | ஈ |

❋ (தொடரும்)

# Towards God - Realisation

**Swami Sivananda**

Salutations to Sri Nataraja, the Lord of the Universe.

Blessed devotees!

The famous temple dedicated to Lord Sri Nataraja at Chidambaram is one of the most ancient places of worship. Its sanctity has an irresistible appeal. It exercises great influence over all. Saints have sung the Immortal Glory of the Lord, through the Thevaram, Thiruvachakam and other immortal verses.

The temple offers great opportunity for the evolution of Man through devotion. The precincts of the temple are filled with holy vibrations, and give great peace, due to the regular Puja, the recitation of Vedic Mantras etc. Worship is one of the easiest methods of God - realisation.

The Maha Kumbabhishekam performed to the Lord according to Vedic rites, results in purification, spiritual revitalisation, peace and prosperity of the whole world. This is a glorious opportunity for all devotees to render service in this holy cause.

Teach the eye to behold the Form of the Lord. Teach the ear to hear the Lord's Lilas. Teach the hands to serve the saints and the poor. Teach the tongue to sing His Glory and Praise. You will grow in devotion.

Take refuge in the Lord. Live for Him. Surrender to Him. Have faith in His Name. His Grace will descend on you. Just as fire removes cold, fear and darkness, even so, worship of the Lord removes the coldness of sin, fear of rebirth and the darkness of ignorance.

The Lord stops wherever he sees devotion and faith. He worked with Raidas in tanning hides. He wove scarfs on Kabir's loom. He carried clay for Gora, the potter. He paid the bills of Narsi Mehta. How kind and merciful is the Lord! Glory to the Lord and His devotees! Take refuge in Him alone.


God is always with you. He will protect and deliver you. His blessings will overflow into your life and transform your mind and body. Develop your consciousness of spiritual things. Make a special effort daily to exercise and control over your thoughts, words and actions. Feel His presence in your room. Pray and meditate daily.

Prayer elevates the mind. It fills the mind with purity. It is associated with praise of God. It keeps the mind in tune with God. Prayer can reach a realm where reason does not dare to enter. Prayer can move mountains. It can work miracles. It frees the devotee from the fear of death. It brings him nearer to God and makes him feel the divine consciousness and his essential, immortal and blissful nature.

May God bless you all with health and long life, Peace, Prosperity, Bhakti and Mukti! Glory to the Lord!

***Praising the glory of the Chidambaram Nataraja temple Swami Sivananda of the Divine Life Society, Rishikesh underlines the importance of worship and prayer for god realisation.***

Edited & Published by Mr. S. Shivasaravanabavan on behalf of the Saiva Paripalana Sabai 450, K.K.S Road, Jaffna & Printed at Bharathi Pathippakam, 430, K.K.S Road, Jaffna. 14.03.2009 (1st Day of Pankuni Thinkal). Phone: 021 222 7678




# வண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தானமும் பரிவாரக் கோவில்களும்